வருகிறது. மற்றும் எம். எம். வீதி சந்தைப்பேட்டை சந்திப்பு, கீழ ஊரணி ஆகிய இடங்களிலும் ஆவின் பாலகங்கள் அமைப்பது குறித்து பரிசீலனையில் உள்ளது.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களின் தேவையை உணர்ந்து உடனுக்குடன் அவர்கள் குறைகளைக் களைந்து வரும் நமது மாண்புமிகு இதய தெய்வத்தின் ஆட்சியில் இதுபோன்ற நல்ல பதிலைத் தந்த மாண்புமிகு அமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, நான் எனது கேள்வியில் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதிகளானது காரைக்குடி நகரத்தில் முக்கியப் பகுதிகளாக இருப்பதோடு மட்டுமல்லாது, அங்கு மக்கள் தொகையும் அதிகமாக இருக்கிற காரணத்தினால் அவர்கள் பால் பாக்கெட்டுகள் பெறுவதென்றால் பல்வேறு இடங்களுக்கு அலைந்து சென்று வாங்கும் அவல நிலை இருக்கிறது. எனவே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற தைத் திருநாளாம் பொங்கலுக்கு முன்பாக இந்த பால் விற்பனை நிலையங்கள், நான் குறிப்பிட்டுள்ள இடங்களில் அமைத்துத் தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 112, திரு. து. மூர்த்தி; மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

112--

சீர்காழியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைத்தல்:

16401-திரு. து. மூர்த்தி:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

சீர்காழி தொகுதியில், சீர்காழியை மையமாகக் கொண்டு சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதிக்குப் பக்கத்தில் நடிப்பிசைப் புலவர்

கே. ஆர். ரர்மசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது. அந்த ஆலையில் கரும்பு சக்கை, அதாவது பகாஸ் அதிகம் கிடைக்கிறது. அதைக் கொண்டு காகித தொழிற்சாலையும் அமைக்கலாம்; மேலும் சர்க்கரைக் கழிவைப் பயன்படுத்தி ஸ்பிரிட் தயாரிப்பதற்கான தொழிற்சாலையும் அமைக்கலாம். இங்கு கிடைக்கும் கரும்பு சக்கையை பேப்பர் மில்லுக்கு எடுத்துச் செல்கிறார்கள். எனவே, சிப்காட் தொழிற்பேட்டையைப் போன்ற ஒரு தொழிற்சாலை அமைத்தால், போக்குவரத்துச் செலவை மிச்சப்படுத்துவதோடு, என் பகுதியிலுள்ள படித்த இளைஞர்களுக்கும் வேலை இல்லாத மக்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைப்பதற்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும். எனவே, சீர்காழியை மையமாகக் கொண்டு, சிப்காட் தொழிற்பேட்டையை அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் பனங்குடி என்கிற இடத்தில் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் TACID என்று சொல்லப்படுகிற அந்த மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ஒரு தொழிற்பேட்டையை அமைப்பதற்கான ஆய்த்த வேலை நடைபெற்று வருகின்றன. ஆகவே, உறுப்பினர் அவர்கள் கோரியபடி சீர்காழியில் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லை. உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற அந்தத் தேவைகளை பனங்குடியிலே ஏற்பட இருக்கிற தொழிற்பேட்டையின் மூலம் பூர்த்தி செய்துகொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 113, டாக்டர் எம். கருப்புசாமி; சமூக நலத்துறை அமைச்சர்.

113--

தொண்டு நிறுவனங்களைக் கவனிக்கக் கண்காணிப்புக் குழு அமைத்தல்.

*** *20522*-டாக்டர் எம். கருப்புசாமி:**

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தொண்டு நிறுவனங்களில் சில, வெளிநாடு, இந்திய அரசு, தமிழக அரசு ஆகியவற்றின் உதவிகளைப் பெற்றும்கூட மக்களுக்கு உதவாமல் இருப்பதை அரசு அறியுமா ?